Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை (28-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 152

# மன்னாரில் வாகனக் கண்ணிக்கு படையினர் பலர் உடல் சிதறிப் பலி!

## நேற்றுப் பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

**மன்னாரில் நேற்றுப் பகல் விடுதலைப் புலிகளின் வாகனக் கண்ணியில் சிக்கி இராணுவத்தினர் பலர் உடல் சிதறிப் பலியானார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

வங்காலை முகாமில் இருந்து நானாட்டான் நேர்க்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ அணியினர் வீதியில் வாகனக் கண்ணி ஒன்றைக் கண்டு அதை அகற்ற முயற்சிக்கும் வேளை அது வெடித்தது என்றும்—

அப்போது அங்கு நின்ற இராணுவத்தினர் பலர் அதில் சிக்கி உடல் சிதறிப் பலியாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த படையினர் எண்ணிக்கை குறித்தும் ஏனைய சேதங்கள் குறித்தும் மேலதிக தகவல்கள் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (ஒ-3)

## குடும்பப் பெண் மூதூரில் கைது

திருகோணமலை மாவட்டம் மூதூர் பொலீஸ் நிலைய முகாம் படையினர் கடந்த 20 ஆம் திகதி பச்சநூர் கிராமத்தைச் சுற்றி வளைத்து ஆறு பிள்ளைகளின் தாயாரான பெனடிக் கிரியாவதி (40 வயது) என்பவரைக் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ 3]

**தரையிலிருந்து 2 மைல் வரை**

## வடமராட்சியில் மீன் பிடிக்க கடற்படையினர் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 28

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் கரையிலிருந்து இரண்டு மைல் தூரம்வரை மட்டும் மீன் பிடித் தொழிலில் ஈடுபட மீனவருக்கு கடற்படையினர் அனுமதி வழங்கியிருக்கின்றனர்.

இதுபற்றி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

இந்த அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, இப்பகுதியில் தொழிலில் ஈடுபடக்கூடிய — பாதிக்கப்பட்ட — மீனவர்களுக்கு, அவர்கள் தொழிலை ஆரம்பிக்க வசதியாக கரைவலைகளை வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் இத் திட்டத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை மூலம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும்—

இத்திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 200 மீனவர் நன்மை அடைவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மட்டக்களப்பு மோதலில் இரு வேங்கைகள் களப்பலி

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் காலை குறிஞ்சா முனைப் பகுதியில் பதுங்கியிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்பாராத வகையில் மோதல் இடம்பெற்றது.

புலிகளின் தாக்குதலையடுத்து படையினர் இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமுக்கு ஓடினர்.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகளான கப்டன் நித்தி (இராசையா நித்தியானந்தன் — மட்டக்களப்பு), வீரவேங்கை பாலு மகேந்திரா (கணபதிப்பிள்ளை உருத்திரா - அக்கரைப்பற்று) ஆகியோர் வீரமரணமடைந்தனர். [உ-3]

## கொக்குத்தொடுவாயில் 5 வேங்கைகள் வீரமரணம்

மணலாறு மாவட்டம், கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஐவர் களப்பலியாகினர்.

இந்த மோதலின் போது விடுதலைப் புலிகள் வீரர்கள் நடத்திய பெரும் தாக்குதலில், ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பலர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன என்பது தெரிந்ததே.

களப் பலியான வீரவேங்கைகள் ஐவரினதும் விபரம் வருமாறு;-

கப்டன் வேங்கையன் [மார்க்கண்டு ஜெகநாதன் - மட்டக்களப்பு], கப்டன் சிவராமன் (அல்பிரட் அருள் சிலன் - மன்னார்). லெப்டினன்ட் செந்தாளன் (தியாகராசா தயாபரன் - மட்டக்களப்பு), லெப்டினன்ட் கர்ணன் (தவராஜசிலன் பிரதீபன் - மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் முத்து (தங்கராசா மன்மதராசா-மட்டக்களப்பு). [ஒ-3-165]

## ‘குமண’ கப்பல் திருமலைக்கு மும்முறை சென்று திரும்பும்

பருத்தித்துறைக்கு வந்துள்ள ‘குமண’ கப்பல் பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் மூன்று தொடர் சேவைகளை நடத்தவிருக்கிறது.

நோயாளர்கள் மற்றும் அரச ஊழியர்களை ஏற்றிச் செல்லவும் அழைத்து வரவுமே இந்த சேவைகள் நடத்தப்படவிருக்கின்றன.

‘குமண’ கப்பல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருமலை சென்று, கொழும்பிலிருந்து வந்துசேரும் நோயாளர்களை ஏற்றிவரும்.

அடுத்த நாள் பருத்தித்துறையிலிருந்து மற்றொரு தொகுதி நோயாளர்களை இக்கப்பலில் திருமலைக்குக் கூட்டிச் செல்லவும் —

மீண்டும் அடுத்த வாரம் வியாழக்கிழமை இங்கிருந்து அரச ஊழியர்களை இக் கப்பலில் திருமலைக்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அரச ஊழியர்களையும் நோயாளர்களையும் ‘குமண’ கப்பலில் மட்டுமே அழைத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருக்கின்றது என்பது தெரிந்ததே.

அதன் காரணமாகவே ‘குமண’ விரைவு தொடர் சேவைகளை நடத்துகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

## வவுனியா மன்னாரில் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 28

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மீண்டும் இன்று காலை 6.00 மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என கூட்டுப்படைகள் தலைமையகம் அறிவித்துள்ளது. (ஒ-10)

## மட்டக்களப்பில் 17 தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 28

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் கிலாச்சோலைக் கிராமத்தை தேச விரோத சக்திகளின் உதவியுடன் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய படையினர் அங்கு 17 தமிழர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

களுவாஞ்சிக்குடி, மண்டூர், 13 ஆம் கிராமம், 14 ஆம் கிராமம் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய படையினரே இத்தேடுதலை நடத்தினர்.

இத்தேடுதலின்போது அப்பகுதித் தமிழர்கள் பலர் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். [உ-ஒ-3]

## தபால் பொதிகள் வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப். 28

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ‘குமண’ கப்பலில் 290 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இப்பொதிகள் இன்று யாழ் தபாலகத்துக்கு எடுத்து வரப்படும் என்றும் —

தபால்கள் இன்றே தரம் பிரிக்கப்பட்டு நாளை விநியோகிக்கப்படும் என்றும் தபால வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-165-3)

## முச்சந்தி முரளி



அம்மணி ஆட்சியிலை பத்திரிகைச் சுதந்திரம் தொடி கட்டிப் பறக்குது......!

## காபூலில் கடும் சண்டை

லண்டன், ஏப். 28

ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தலைநகர் காபூலில் முஜாகுதீன் போராளிகள் குழுக்கள் தொடர்ந்து கடும் சண்டை புரிந்து வருகின்றனர்.

எனினும், யுத்தம் புரியும் இரு குழுக்களும் யுத்த நிறுத்தத்துக்குச் சம்மதித்திருப்பதாக பாகிஸ்தான் நேற்று தெரிவித்தது.

எனினும் காபூல் நகர வீதிகளில் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல்களும் ஆட்லறி ஷெல் பிரயோகங்களும் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

## பல்கலைக்கழகத்துக்கு 3 ஜெனரேட்டர்கள்

யாழ். பல்கலைக் கழகத்துக்கு 50 கே. டபிள்யூ. வலுவுள்ள மூன்று ஜெனரேட்டர்களை வழங்க சுவீடிஷ் நிறுவனமான ‘சிடா’ ஒப்புதல் அளித்துள்ளது.

அண்மையில் சுவீடன் சென்ற யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அங்கு நடத்திய பேச்சுக்களையடுத்து இந்த உதவி கிடைக்கவுள்ளது.

இதேவேளை—

யாழ் பல்கலைக்கழக வெளியீடுகளை அச்சிடுவதற்கான அச்சு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 10 லட்சம் ரூபாவை வழங்க நோர்வேயில் வதியும் தமிழர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர் என்றும் தெரியவந்தது.

## கண்ணி வெடித்ததை தொடர்ந்து குண்டு வீச்சு!

மன்னாரில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து பிற்பகல் 2 மணியளவில் 11 ஆம் கட்டைப் பகுதியில் கடும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதை அடுத்து ஒரு மணி நேரத்தின் பின்னரும் அப்பகுதியில் இரு தடவைகள் பொம்மர்களும், அவ்ரோ விமானம் ஒன்றும் கண்டபடி குண்டு வீச்சுக்களை நடத்தின என்றும் ஹெலியும் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது என்றும் தெரிய வந்தது. [ஒ-8]

## மேலும் 2 பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு “வாரண்ட்”

### தமிழக சபாநாயகர் அறிவிப்பு

சென்னை, ஏப். 28

கோவை மாலைமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களான திரு. எஸ். கே. சுந்தர், திரு. எஸ். செல்வம் ஆகிய இருவரையும் கைது செய்வதற்கு பிடிவிறாந்து [வாரண்ட்] பிறப்பிக்கப்படும் என்று தமிழக சட்டசபையில் சபாநாயகர் திரு. சேடப்பட்டி முத்தையா நேற்று அறிவித்தார்.

பிரஸ்தாப ஆசிரியர்கள் இருவரும் நேற்று திங்களன்று சட்டசபைக்கு சமூகம் தந்து, கூண்டில் ஏறி, கண்டனத்தைப்பெற்றுக் கொள்ளவேண்டும் என்று தாம் விதித்த ஆணைக்குப் பதிலாக—

அவர்கள் இருவரும் ஒரே மாதிரியான கடிதங்களைத் தமக்கு எழுதி இருப்பதாகவும் சபாநாயகர் நேற்று சொன்னார்.

மேற்படி ஆசிரியர்கள் இருவரும் தமிழக சட்டசபையை அவமதிக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டிருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது தெரிந்ததே.

“இல்லஸ்ரேட் வீக்லி” பத்திரிகையின் முன்னாள் செய்தியாளரான சுனிலை கைது செய்து, சட்டசபையில் ஆஜர் செய்யும்படி தமிழக சட்டசபை சபாநாயகர் பொலிஸாருக்கு உத்தரவிட்டதும்—

அதனை ஆட்சேபித்து பத்திரிகையாளர் சுனில் தாக்கல்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யு. எஸ். எயிட் நிறுவனத்தின் 3ஆம் கட்ட உதவித் திட்டம்

### யாழ். மாவட்டத்தில் அமுலாகும்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். மாவட்டத்தில், யு. எஸ். எயிட் நிறுவனத்தின் மூன்றாம் கட்ட விவசாயத் திட்டத்தை அமுல் செய்வது பற்றி தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கெயர் இன்டர் நஷனல் அமைப்பின் பணிப்பாளர் திருமதி மொன்காஸ்ரர் யாழ்ப்பாணத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி விட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார்.

ஏற்கனவே அமுலான முதலாம் கட்ட இரண்டாம் கட்ட விவசாயத் திட்டங்களால் யாழ் மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாம் கட்டமாக 15 ஆயிரம் விவசாயிகளுக்கு சிறு தானிய உற்பத்திக்கு உதவி வழங்க வேண்டியதன் அவசியத்தை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் திருமதி ரி. மொன்காஸ்ரரிடம் வற்புறுத்தி இருந்தார். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C. R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, இல. 8, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [20681]

### தேவை

கரியில் பாவிக்கும் பித்தளை பொயிலர் புதியது, பழையது தேவை. தொடர்பு கொள்ளவும் ஹோட்டல் றொலெக்ஸ், 840, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [20694]

### இலவச திருமண சேவை

வயது 37, பூசம், செவ்வாய் கிரகபாவம் அற்ற ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். அரச சுய தொழில் புரிவோர் விரும்பத்தக்கது. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4805]

35 வயது, குருகுலம் இந்து, திருவாதிரை, செவ்வாய் 12, ஆசிரியருக்கு, அரச சேவையாளரும், 38 வயது, சதயம் மணப்பெண்ணுக்கு மணமகனும் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து: விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4700]

### மணமக்கள் தேவை

சதயம் M. Sc., Engineer, 31, Surveyor 33 மணமகன்களுக்கும், அவிட்டம், ஆசிரியை 32 மணமகளுக்கும் குறிப்புகளுண்டு. தொடர்பு: அ. பாலகிருஷ்ணன் 6, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (20746)

### மணமகன் தேவை

29 வயது, சதய நட்சத்திரத்தில் பிறந்த விஞ்ஞான ஆசிரியைக்கு, வெளிநாட்டிலுள்ள அல்லது உள்நாட்டில் அரசாங்க உத்தியோகம் வகிக்கும் மணமகன் தேவை. இலட்சுமி திருமண சேவை, செ. விசயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய் [20741]

### மணமகள் தேவை

ஜேர்மனியில் பயிற்றப்பட்டு கனடாவில் இயந்திர நுட்பவியலாளராக வேலை செய்யும் 29 வயது மணமகனுக்கு பெற்றோர் 23 வயதிற்கு மேற்படாத மணமகளைத் தேடுகின்றனர். விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 401, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [20721]

பிரான்சில் தொழில் புரியும், வடமராட்சியைச் சேர்ந்த, 33 வயதுடைய, நல்ல ஒழுக்கமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே தகைமையில் மணமகள் தேவை திருமணத்தைத் தீர்மானிக்கச் சீதனம் தடையாகாது. திருமணம் இங்கு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். இல. 839, C/o உதயன், யாழ்ப்பாணம் [சி-2231]

### தவறிவிட்டது

627580843X இலக்க அடையாள அட்டையுடன் முக்கிய ஆவணங்கள் அடங்கிய வெள்ளை பேர்ஸ், 27-4-92 அத்தியடிக்கும், கைலாச பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 117/4, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும் [20749]

## நிவாரணத்துக்கு பயறு, கௌபி

தெல்லிப்பழை, ஏப். 28

நிவாரணத்துக்கு அரிசி, மா குறைவாகவும் பயறு கௌபி என்பன கூடுதலாகவும் தற்போது வழங்கப்படுகின்றன.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் தனது கிளைகள் மூலம் பயறு, கௌபி ஆகிய வற்றை இம்முறை கூடுதலாக வழங்கி வருகிறது

[இ-68]

## கால எல்லை நீடிப்பு

காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை நடத்துவதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் கால எல்லை அடுத்த ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(த)

## PITMANS
(London)

**SHORT - HAND & TYPING**

வேலை செய்யும் மாணவர்கள் பலரின் வேண்டுகோளுக்கமைய சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்:
**02 — 05 — 1992**

விவரங்களுக்கு:
School of Business Administration
16, 3rd Cross Street, Jaffna

[சி-2235]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு
**வை. மு. பஞ்சலிங்கம்**
(யாழ். மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும்- 1984-1989)

தோற்றம்:
**11—06—1934**
மறைவு:
**01—05—1989**
திதி:
**28—04 -1992**

மீளாத்துயரில் ஆழ்த்தி, என்றும் நீங்காத நினைவுறுத்தி, இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

[சி 1950]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 03 — 1934



மறைவு: 10 — 05 — 1991

**அமரர் சின்னையா வல்லிபுரம் நடராசா**
[ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்]

திதி: 28 — 04 — 1992

அன்பின் சிகரமே! அருமை அப்பா! அன்பாலும், பண்பாலும் அரவணைத்து வளர்த்தீரே! ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எமது துயர். நீண்டவழி நீர், சென்று இறைவனடி சேர்ந்தாலும், தூண்டில் புழுவாய் துடிக்கின்றோம் உம்மை நினைத்து எம்மைப் பிரிந்த ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் உருவம் எம் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்:

அன்பு மனைவி, மக்கள்,
உறவினர்கள்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.

[20736]

## நாலாவது ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் நரேன்**
(நல்லநாதன் ஜெனார்த்தனன்)

மலர்வு: **24 — 11 — 1963**
உதிர்வு: **28 — 04 — 1988**

வேங்கைகள் களத்தினில் வீழ்வதில்லை
ஓங்கிடும் பகைஞரின் உயிர்குடித்திட்டு
ஏங்கிடும் தமிழினத் தின்னல் களைந்திடத்
தூவிய விதைகளாய்த் துளிர்த்துக்
காவிய நாயகராகித் தமிழீழத்து
மாவீர ராக மலர்ந்திடுகின்றார்.

களத்தினில் தீரனும் கனலெனப் பாய்ந்து
உளமிலா எதிரிகள் உயிரிலாதே விழப் பன்முறை
போராடி ஆவி போக்கினன் அதனால்
வீர காவியமாய் விளங்கும் அவன்றான்
நாலாண்டென்ன எந் நாளாயினும்
எம் இதய அஞ்சலிக்காளாகியுள்ளான்
இன்றும் அவனுக் கெம் மிதய அஞ்சலிகள்!

அப்பா, அம்மா, சகோதரர்,
மாமா, மாமி,
உற்றார், நண்பர்கள்.

218/9, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[20737]

## உயர்கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி.

B. A. 92/93 — 8 மணி
G. A. Q. 92/93 — 2 மணி

26 - 04 - 1992 முதல்
ஆரம்பமாகிவிட்டது.

தமிழ் **திரு. குழந்தை**

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

[சி-1953]

## Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி
தற்போது
வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

25% விசேட கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:

**பாட்டா** மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில் றோட், வவுனியா.
30, குமார வீதி, கொழும்பு-14.

[20324]

## துரித மீட்டல் வகுப்பு O/L
## கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A

வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

**Day Class O/L - 1992**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. இரா. அருள்செல்வம் |
| சமூகக்கல்வி | — | திரு. கணேஸ் |
| தமிழ் | — | சிவம் |
| சமயம் | | பண்டிதர் |
| ஆங்கிலம் | — | திரு. தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. விக்கி |

**ஆரம்பம்- 30-4-92**
காலை 8 மணி

குறிப்பு:-
மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப பாடங்களைத் தெரிவு செய்யலாம். வினா - விடை வகுப்புகளும் நடைபெறும்.

(சி-2233)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**லூதர் ஜே. செல்வராஜா**

"அக்கரையில் நாம் சந்திப்போம்"

மனைவி - ராணி,
பிள்ளைகள் - துஷான், ஜேனி,

"செல்வகிரி",
57 அரசடி றோட்,
யாழ்ப்பாணம்.

[20656]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தற்கொலை முயற்சி வேண்டாம்

தமிழ் நாட்டில் இருந்து திரும்பக் கூட்டி வரப்படும் ஈழத் தமிழ் அகதிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் குடியமர்த்தப் போவதாக அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்கா கூறியிருக்கிறார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது எந்நேரத்திலும் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கப்படலாம். அதன் காரணமாக, அகதிகள் அங்கு குடியமர்ந்தால் பாதிக்கப்படுவர்; பாதுகாப்பு இல்லாத நிலைமை உருவாகும்; என்பது அரசாங்கத்தின் வாதம்.

ஆனால் அது விதண்டா வாதம். அதற்கு உள்நோக்கங்கள் இரண்டு உள. இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இப்போது மிகக் குறைந்த எண்ணிக்கையான தமிழ் மக்களே வாழ்கிறார்கள். அவர்களை வைத்துக் கொண்டு தான் அப்பகுதிகளில் அரச சிவில் நிர்வாகம் நடப்பதாக அரசும், அமைச்சர்களும், இராணுவ உயர் அதிகாரிகளும் தம்பட்டம் அடித்து வருகிறார்கள்.

அப்பகுதிகளில் இந்தியாவிலிருந்து வரும் அகதிகளைக் குடியமர்த்திவிட்டால், கணிசமான தமிழர்களைத் சாம் ஆள்வதாக மேலும் பீற்றலாம் என்பது ஒரு நோக்கம்.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அகதிகளைக் குடியமரச் செய்துவிட்டால், மோதல்களின் போது அவர்களைத் தமது கேடயமாகப் பயன்படுத்தலாம் என்பது இரண்டாவது நோக்கம்.

கிழக்கில், இடம்பெயர்ந்த தமிழர்களை இராணுவ முகாம்களுக்குச் சமீபமாக— தாக்குதல்கள் நடக்கக்கூடும் எனக் கருதப்படும் ஆபத்தான [Vulnerable] இடங்களில்— பலாத்காரமாகக் குடியேறச் செய்து, அவர்களைக் கேடயமாகப் பயன்படுத்துவது ஏற்கனவே நடைமுறையில் உண்டு.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள அகதி முகாம்களில் இருந்து தமிழர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்று கொலை செய்யும் போது, அப்பகுதிகளுக்குச் சென்று குடியமர்வோர் கதி என்னவாகும்?

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அகதிகள் குடியமர்ந்தால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுவது வேடிக்கையானதாகும்.

தமிழ் மக்களின் உயிர், உடைமை நாசங்களைப் பொருட்படுத்தாது, வேண்டுமென்றே படையினர் தாக்குதல் நடத்தியதால் தான் ஈழத் தமிழர்கள் இங்கிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றார்கள் என்பதை அரசு மறந்தது ஏனோ?

இவை எல்லாவற்றையும் தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அடிமைகளாய் வாழ்வதை விட, தங்கள் சொந்த ஊர்களுக்கு வந்து குடியமர வேண்டும். அரசின் நச்சுப் பொறியில் விழக் கூடாது. பலாத்காரத்துக்கு இடம் கொடுக்காது தமது சொந்த ஊர்களில் வசிக்கவே விரும்புவதாக ஐ. நா. அகதிகள் தூதராலயம் போன்ற பொறுப்பான நிறுவனங்களிடம் முறையிட வேண்டும்.

அரசின் ஏமாற்று வித்தைக்கு இரையாகி தற்கொலை முயற்சியில் ஈடுபடக்கூடாது.

# செல்வாவின் சேவைக்கான மதிப்பை இன்றைய போராட்டம் கொடுக்கிறது

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் யோகி

யாழ்ப்பாணம், ஏப் 28

''தந்தை செல்வாவின் பாசறையில் வளராத ஒரு தலைமை இங்கே போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறது. தந்தை செல்வாவுக்கான — அவர் செய்த சேவைகளுக்கான — மதிப்பை, மரியாதையை இன்று நடக்கும் போராட்டம் அவருக்குக் கொடுத்துள்ளது''.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி.

நல்லூரில் கடந்த ஞாயிறன்று நடந்த தந்தை செல்வாவின் 15 ஆவது நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு திரு யோகி சிறப்புரை ஆற்றினார்.

திரு. யோகி அங்கு மேலும் தெரிவித்ததாவது;

இன்று நடைபெறும் தமிழீழப் போராட்டத்துக்கான விழிப்புணர்வை தந்தை செல்வநாயகம் ஏற்படுத்தியிருந்தார்.

1985 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழ கோரிக்கையை கைவிட்டு நின்ற நிலையில், சென்னையில் அவர்களை அழைத்துப் பேசினோம்.

' சிங்கள அரசு உங்களைக் கொழும்புக்கு அழைக்கிறது. டில்லி அரசு எம்மீது அழுத்தங்களைப் போடுகிறது. இந்நிலையில் எம் இலட்சியமான தமிழீழக் கோரிக்கையை விட்டுக் கொடுக்க எம்மால் முடியாது. இந்தக் கட்டத்தில் நீங்கள் எம் மாபெரும் இலட்சியத்தை முன்னெடுக்க எமக்கு உதவுங்கள். கொழும்பு சென்று சமஷ்டி முறையிலான யோசனை ஒன்றை முன்வையுங்கள். சிங்கள அரசு அதை நிராகரிக்கும். அப்போது தனித் தமிழ் ஈழம் தான் எமது ஒரே முடிவு என்பதை அரசுக்கு உணர்த்திவிட்டு எமது போராட்டத்துக்குப் பின்னால் நில்லுங்கள்''.

இப்படி நாம் அமிர்தலிங்கம் உட்பட்ட கூட்டணியினரிடம் சொன்னோம்.

ஆனால் அவர்கள் துரோகம் இழைத்து விட்டார்கள். கொழும்பு சென்று விட்டுத் திரும்பி வந்து ''அரசு எமக்கு ஐந்து சத வீத உரிமை தருவதாகச் சொல்லியிருக்கிறது'' என்றார்கள். அவர்கள் எம் மாபெரும் போராட்டத்துக்கு துரோகமிழைத்தனர்.

### மதிக்கிறோம்

ஆனால் இன்னொரு வழியில் தந்தை செல்வாவின் வழி வந்த தொண்டர்கள் நடத்திய போராட்டங்களை சத்தியாக்கிரகங்களை, அதனால் அவர்கள் அடைந்த இழப்புக்களை நாம் மதிக்கிறோம்.

அந்தக் காலத்திலும் துரோகிகள், பதவி ஆசைக்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள் மத்தியில் இருந்து கொண்டு தான் தந்தை செல்வா கடுமையான போராட்டத்தைச் சந்தித்தார்.

எமது போராட்டம் பற்றிய விழிப்புணர்வை தம்முடன் வைத்திருந்தார். அவருடன் இருந்தவர்கள் செய்யாததை அவரது பாசறையில் வளராத ஒரு தலைமை இங்கே செய்து போராட்டத்தைப் பெரும் வளர்ச்சியுடன் முன்னெடுத்துச் சென்றிருக்கிறது.

அந்த வகையில் — இன்று அவருக்கான — அவர் செய்த செயல்களுக்கான மதிப்பை எங்கள் போராட்டம் அவருக்குக் கொடுத்துள்ளது.

இப்படி திரு. யோகி கூறினார்.

### தமிழ் அரசு மீள அமைய வேண்டும்

கவிஞர் வாஞ்சிநாதன் பேசுகையில் கூறியதாவது:

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் எமது உரிமைகளைப் பெற தந்தை செல்வா முயன்றபோது அவரும் அவரது ஆதரவாளர்களும் சிங்களக் காடையர்களால் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளானார்கள்.

அகிம்சைக்கு இந்தியாவே செவிசாய்க்கவில்லை என்றால் சிங்கள இனம் எப்படிச் செவிசாய்க்கும்.

9 ஆம், 10 ஆம் நூற்றாண்டுகளில் இருந்ததுபோன்று மீளவும் எமது அரசு அமைய வேண்டும் என்பதே தந்தை செல்வாவின் இலட்சியம்.

வீரம்மிக்க சோழ அரசின் கொடி புலிக்கொடி. நாமும் உறுதியான போராட்டத்தின் மூலம் புலிக்கொடியின் கீழ் எமது அரசை நிறுவுவது திண்ணம்.

இப்படி அவர் கூறினார்.

திரு. செ. கோடீஸ்வரன் பேசும்போது, தமிழர்களுக்கு ஒரு தேசம் தேவை என்ற கொள்கையை முன்வைத்து அதற்காகப் போராடிய தலைவர் திரு செல்வா என்றார்.

### தொடரும் துரோகத்தனம்

வண. பிதா. அ. ஜெயக்குமார் பேசுகையில் கூறியதாவது:

தமிழ் மக்களின் இறைமை பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் தந்தை செல்வா.

அவரால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியையும் அதன் உறுப்பினர்களையும் பிரிவினைவாதிகள் என்ற நோக்குடனேயே சிங்கள அரசியல்வாதிகள் பார்த்து வந்தனர்.

டொனமூர் அரசியல் அமைப்புக்கு ஆதரவாக அன்று ஒரு தமிழர் வாக்களித்தார். அது தமிழினத்தின் துயருக்குக் காரணமாக அமைந்தது. தமிழர்களை அழிப்பதற்குத் தமிழர்களையே சிங்களவர்கள் பயன்படுத்தும் நிலை இன்னும் தொடருகின்றது. தந்தை செல்வநாயகம் தம் இலட்சியத்தில் உறுதியாக நின்று தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்.

இப்படி அவர் கூறினார்.

திரு. ஆ. தருமரத்தினம் பேசும்போது, தமிழர்களின் தாயகம் மீட்கப்பட வேண்டும் என்ற இலட்சியத்துடன் அரசியலில் புகுந்த தந்தை செல்வா ஒரு சிறந்த ஜனநாயகவாதி என்பதால் இரண்டு பிரதமர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்பினார். எனினும் அது கைகூடாத பட்சத்தில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் போராட்டத்திற்கு அவர் வித்திட்டார். அவரின் இலட்சியம் போராளிகளால் ஈடேறுவது நிச்சயம் என்றார்.

மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

திரு ப. கணபதிப்பிள்ளை தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது [இ-111-5]

# கலை, மொழி துறைகளிலும் சிறப்பாகப் பணிபுரிந்தவர்

## யாழ். ஆயருக்கு தங்கம்மா அப்பாக்குட்டி புகழாரம்

''கடந்த ஐம்பது ஆண்டுகள் திருமறைப் பணியில் ஈடுபட்ட தியோகுப்பிள்ளை ஆண்டகை மறைச் சேவையை உயிர்ச்சேவையாக செய்தவர். மொழிக்கும், இனத்துக்கும் ஆற்றுவது தான் சிறந்த சேவை என்று பெரியோர் கூறியுள்ளனர். அந்த வகையில் ஆண்டகை அவர்கள் தமிழ்க் கலைத்துறையிலும், தமிழ்மொழித் துறையிலும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

யாழ். ஆயரின் வெள்ளி, பொன், பவள ஆண்டுகளை சிறப்பிக்கும் வகையில் திருமறைக் கலாமன்றம் எடுத்த மூன்று நாள் முத்தமிழ் விழாவின் இறுதி நாள் விழாவில் கலந்து ஆசியுரை வழங்கிய துர்க்காதுரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தலைமையில் கடந்த ஞாயிறு நடைபெற்ற இறுதிநாள் விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

சிறப்பான வரலாறு கொண்டது தமிழினம். இப்போது அதன் எழுச்சி தலைதூக்கி உள்ளது. இந்நிலையில் தமிழினம் எழுச்சிபெற வேண்டுமானால் தமிழ்மொழி எழுச்சி அடையவேண்டும். சுவாமி ஞானப்பிரகாசர் தமிழில் வழங்கிய ஒப்பியல் அகராதியை தமிழர்கள் மறக்க முடியாது

இப்படி அவர் கூறினார்.

யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தமது தலைமையுரையில், ''திருமறைப் பணிகளுடன் தமிழ்க் கல்விச் சிந்தனை கொண்டவர் யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை. அதற்காக அவர் தனது காலத்தை பெரிதும் செலவு செய்தார். அத்துடன் இந்து சமய தமிழ் மக்களாலும் பாராட்டப்படும் அளவுக்கு அவருடைய சமயப்பணி சமூகப் பணியாக மிளிர்ந்தது''- என்றார்.

முத்தமிழ் விழா இறுதிநாள் நிகழ்ச்சிகள் ஆரம்பத்தில் யாழ். ஆயர், மக்கள் மலர் சொரிய மங்கள வாத்தியங்கள் சகிதம் திருமறைக்கலா மன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

முதலில் திருமறைக் கலாமன்றத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை ஆயர் நட்டார். அவரைக் கௌரவித்து பாமாலையும் சூட்டப்பெற்றது.

யாழ். மாவட்ட கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ஸ்ரனிமாஸ்டர் சிறப்புரை நிகழ்த்தினார். அதனை அடுத்து பேராசிரியர் அ. சண்முகதாஸ், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா ஆகியோரின் பேருரைகள் இடம்பெற்றன.

கவியரங்கு நாடகத் தமிழ் அரங்கில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கிய 'சிந்தாமணி' ஆகியனவும் விழாவைச் சிறப்புச் செய்தன.

# அரச வங்கிகள் குறித்து தவறான பிரசாரமாம்

## ஜனாதிபதி கூறுகிறார்

அரசாங்கத்தால் நடத்தப்படும் வங்கிகள் மக்கள் மயப்படுத்தப்படமாட்டா. வங்கிகளின் நிர்வாகம் பற்றி சமூக விரோத சக்திகள் தவறான வதந்திகளைப் பரப்பி விடுகின்றன.

ஸ்ரீகோத்தாவில் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் அங்கு பேசியதாவது:

செல்வாக்குப் படைத்தவர்கள் வங்கியிலிருந்து பெருந்தொகையான பணத்தைக் கடனாகப் பெற்று அதைத் திருப்பிச் செலுத்தாமல் உள்ளனர்.

1989 ஆம் ஆண்டு வரை 300 வர்த்தகர்களுக்கும், தனி நபர்களுக்கும் 6 கோடி ரூபா கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதனைத் திருப்பிச் செலுத்தவில்லை இக் கடன்களைத் திருப்பிப் பெறுவதற்காக வங்கிகள் இப்போது நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

இந்த அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்கள் இரண்டு வழிகளில் பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். முதலாவது வழி கடந்த காலங்களில் நடைபெற்றது போல் சூறையாடுவதும், களவெடுப்பதும் — இரண்டாவது வழி வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களிமிருந்து லஞ்சம் பெற்றுக் கொள்வது.

இவ்வாறு அவர் சொன்னார். [த-10]

# தேர்தல் உடனடியாக நடக்காது என்கிறார் பிரேமா

கொழும்பு, ஏப். 28

நாடாளுமன்றத்தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் திட்டமிட்டபடி உரிய காலத்திலேயே நடத்தப்படும். இடையில் அவை நடத்தப்படமாட்டா.

ஜனாதிபதி பிரேமதாஸா இரத்தினபுரியில் ஞாயிறு நடந்த ஐக்கிய தேசியக்கட்சிக் கிளை வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் நாட்டில் இருந்து வர்க்க பேதத்தை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இன, மத, கட்சி வேறுபாடுகளிலும் பார்க்க வர்க்கபேதம் பெரிய சாபக்கேடாக உள்ளது என்றும் அவர் சொன்னார்.

அரசியல் அதிகாரமும் பொருளாதார பலமும் தமது கைகளிலேயே இருக்க வேண்டும் என்று ஒரு சிறிய குழுவினர் விரும்புகின்றார்கள். செல்வாக்கும் வசதியும் படைத்த ஒரு பிரிவினராக விளங்கும் இவர்களே எல்லாக் கட்சிகளுக்குள்ளும் எல்லாச்சமூகங்களுக்குள்ளும்பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றார்கள் என்றும் ஜனாதிபதி கூறினார். [ஓ-எ-த]

# மேதின ஊர்திகளில் சிறந்தவற்றுக்குப் பரிசு

யாழ்ப்பாணம், ஏப். 28

மேதின ஊர்வலத்தில் இடம்பெறும் சிறந்த ஊர்திகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு அறிவித்திருக்கிறது.

பேரினவாதத்தின் கொடுரத்திலிருந்து விடுபடுவதற்கான — வீரஞ்செறிந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை உயிரோட்டத்துடன் பிரதிபலிக்கும் சிறந்த ஊர்திகளுக்கே பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஊர்திகளைப் பார்வையிட்டு தகுதியானவற்றைத் தெரிவு செய்வதற்காக நடுவர் குழு ஒன்றையே தான் செயற்பாட்டுக் குழு நியமித்திருக்கிறது. [உ]

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ் வண்ணார்பண்ணை காட்டுத்துறை மகாமாரி அம்மன் கோயில் சாந்திக மகோற்சவ பூர்த்தி விழா இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இரவு7 மணியளவில் அம்பாள் சப்பர திருவீதி உலா இடம்பெறும். [ஓ]

## முக்கிய நபர் கைதாம்

அம்பாறை. மஹரகம குண்டு வெடிப்புகள் சம்பந்தமாகப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேரி என்ற இந்த சந்தேக நபர் குண்டு வெடிப்புக்கு முன்னர் அந்தக் காரில் பயணம் செய்தவர் என்றும் —

அவர் வத்தளையில் இறங்கிய பின்னர் மஹரகமவில் வைத்து காரில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நபர் கடந்த சனியன்று அம்பாறையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். (த)

## உணவு முத்திரை விநியோகம்

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 1991 நவம்பர் 1992 மார்ச் மாதங்களுக்குரிய உணவு முத்திரைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து விநியோகிக்கப்படும். [த-90]

## போதைவஸ்து கடத்தல்: பெண்கள் முன்னணியில்

போதைவஸ்து கடத்தல் மற்றும் வைத்திருந்ததற்காக இலங்கையில் தண்டனை பெற்ற பெண்களின் எண்ணிக்கை 200 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

1989 இல் 131 பெண்கள் போதைவஸ்து தொடர்பான குற்றங்களுக்காக சிறைத் தண்டனைக்குள்ளாகினார்கள் என்றும் இலங்கை போதைத் தடுப்புச் சங்கத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

லஞ்சம் வாங்கும் குற்றச் செயல்களிலும் பெண்கள் ஈடுபடுவது அதிகரித்திருப்பதாக லஞ்ச ஆணையாளரான திருமதி நெலும் கமகே தெரிவித்தார்.

## மேலும் 2...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்த மனுவை புதுடில்லி உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, சபாநாயகரின் உணிட்புக்கு எதிராக தடை உத்தரவு விதித்ததும் குறிப்பிடத்தக்கவையே. [உ-ஓ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நம

# ★ திருமண அழைப்பு ★

ஆங்கிரச வருஷம் சித்திரை மாதம் 18 ஆம் நாள் (30-04-1992) வியாழக்கிழமை காலை 11-10 மணி தொடக்கம் 01-25 மணி வரையுள்ள

★ சுபமுகூர்த்த வேளையில் ★

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
|---|---|
| **பாலகிருஷ்ணன்** (பாலா) அவர்களுக்கும் | **கமலராணி** (கமலா) அவர்களுக்கும் |

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி திருமண மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், சுற்றத்தவர்கள், நண்பர்கள் யாவரையும் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் பிற்பகல் 5-00 மணிக்கு நடைபெறும்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி க. வி. இராசரெத்தினம்
குடும்பத்தார்,
165, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்
குடும்பத்தார்,
'துர்க்காபுரி',
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

[4699]

# LONDON ACCOUNTANCY CLASSES

## NOV. – DEC. 1992

| | | | |
|---|---|---|---|
| ★ C. I. M. A. | Stage I | 2nd May | 1992 |
| | Stage II | 30th May | 1992 |
| ★ A. A. T. (London) | Prelim | 2nd May | 1992 |
| | Inter | 30th May | 1992 |
| ★ A. A. T. (Sri Lanka) | Level I | 2nd May | 1992 |
| | Level II | 30th May | 1992 |
| ★ I. A. B | Foundation | 2nd May | 1992 |
| | Inter | 2nd May | 1992 |
| | Finals | 6th June | 1992 |

மேலதிக விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE,**
(Result Oriented Institute in North)
14, St Peter's Lane Hospital Road, Jaffna.

[சி/1959]

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்ப்பாணம் பாடுமீன் நீல அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்நீக்கலஸ் அணி மோதுகிறது.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 8 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

வடமராட்சியில் பருத்தித்துறை மற்றும் கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கூட்டங்கள் இன்று காலை அந்தந்த உதவி அரச அதிபர் பணிமனைகளில் நடைபெறவிருக்கின்றன.

பருத்தித்துறையில் காலை 9 மணிக்கும் கரவெட்டியில் முற்பகல் 11 மணிக்கும் கூட்டம் நடைபெறும். [உ]

## நாளை

யாழ்ப்பாணம். ஏப். 28

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சகல பயிற்சி ஆசிரிய மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும் என அதிபர் தெரிவித்துள்ளார். (உ)

## திருடர்கள் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், ஏப் 28

மூளாய் பிள்ளையார் கோயிலடியில் கடை ஒன்றை நேற்று முன்தினம் இரவு உடைத்து திருடியவர்களில் மூவர் அன்று இரவே பொருள்களுடன் சங்கானை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

வழிப்போக்கர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்து காவல்துறையினர் வெவ்வேறு இடங்களில் வைத்து சந்தேக நபர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# யாழ். மத்திய கல்லூரி

க. பொ. த. (உயர் தரம்) வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் பின்வரும் துறைகளுக்குத் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. பௌதிக விஞ்ஞானம்
2. உயிரியல் விஞ்ஞானம்
3. வர்த்தகவியல்
4. கலைப்பிரிவு

உரிய விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/- கல்லூரி அலுவலகத்தில் செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தி 06-05-1992 ற்கு முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம்.

– அதிபர்.

யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம். [20751]

# 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



செல்வி

## இந்திரசாயினி இளங்கோ

| உதயத்தில்: | இதயத்தில்: |
|---|---|
| 24-5-1990 | 29-3-1992 |

பத்து மாதமாய் பாரமறியாமல் பாரினிலே
சுமந்துன்னை
இத்தரையில் ஈன்றெடுத்து எமக்கையில்
கொடுத்துவிட்டேன்
உன் தந்தை மொழியாலே சித்தம் களித்திருந்தோம்
அத்தனையும்
பொய்யாகி விட்டதம்மா பொன்மகளே உன்பிரிவால்!

28-4-92 இன்று அந்தியேட்டிக் கிரியை ஆவரங்கால் இல்லத்தில் நடைபெறும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்

ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. [20756]

# உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

(கல்விப் பகுதியினரின் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறாத - சிரேஷ்ட பாடசாலை)

**O/L** பகல் முழு நேர வகுப்புக்கள்

**ஆரம்பம்: 04 - 05 - 1992** காலை 8 மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-1956]

# பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 92** மீட்டல் வினா-விடை வகுப்பு

★ பொருளியல் ★

**S. வரதராஜன்** B.A. (Hons)

ஆரம்பம்:

பிரிவு I 02-05-1992 சனி 7.00 a.m
சனி, ஞாயிறு } 7.00 – 8.00 a.m

பிரிவு II 05-05-1992 செவ்வாய் 3-00 p.m
செவ்வாய், வியாழன் } 3-00 – 4-00 p.m

குறிப்பு: எமது நிறுவன மாணவர்களுக்கு இவ் வகுப்பு இலவசம். ஏனைய மாணவர்களுக்கு குறிப்பிடளவு இடமே இருப்பதனால் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். [சி-2232]

# 3 ஆம் ஆண்டு நினைவுகள்



## அமரர் திரு. முருகேசு சிவசுப்பு

(கைலாயபிள்ளை - நாதன்ஸ் வவுனியா)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 – 3 – 1945 | 1 – 5 – 1989 |

ஆண்டுகள் மூன்று ஆகியும் எங்கள் உள்ளங்கள் ஆறவில்லை. உம் ஆத்மா சாந்தி பெறுக.

மனைவி, மக்கள், உறவினர்

4 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை. [20755]

ஓன் சென்ரர்
பலாலி வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை

[பெரியதம்பி]

அலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 1048, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை 27-04-92 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், துரைராசா [P.H.I., M.C.-Jaffna], துரைரெத்தினம் [கனடா], துரைசிங்கம் [அவுஸ்திரேலியா], இராசரெத்தினம் [கனடா], பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், A. செல்லையா [S.P.H.I, Kayts], விமலாதேவி, கமலாசினி [கனடா], செல்வராணி [அவுஸ்திரேலியா] காலஞ்சென்ற லீலா, சிவப்பிரியா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10.30 மணிக்கு 1048, கே. கே. எஸ். வீதி [பூநாறி மரத்தடி] யிலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1048, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[20757]

தகவல்:
பெ. துரைராசா
[மகன்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.